ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2070/13 - 2018 මැයි 09 වැනි බදාදා - 2018.05.09
*2070/13 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவிற்கான காப்புவாசகம் (அ) இன் கீழான கட்டளை*

*2018 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க கட்டளை*

எனது குறிப்பு இல. : 4-3/8/2016/பீசீ /509.
பிரிவு தொடர் இல. : டீஜவீகோ/எல்என்டீ/ எல்என்டீ2/ஏசீகியூரீ/5/7.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவிற்கான காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
'மிஹிகத மெதுர',
1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, ஏப்பிறல் 06.

*அட்டவணை*

**1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், குளியாப்பிட்டிய கிழக்கு.

**2. காணியின் விபரம்** : வடமேல் மாகாணத்தில், குருநாகல் மாவட்டத்தில், குளியாப்பிட்டிய கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில், மெடல்பொல கிராம அலுவலர் பிரிவில், கொடிவேவ என்ற கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் மா அதிபதியால் 2017.02.15 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற் சுவட்டு வரைபடத்தின் இல. கேயූ/கேபீசு/ 2017/034 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 'அ' என விபரிக்கப்பட்ட காணித் துண்டின் எல்லைகள்:

01. **துண்டு 'அ' - அற்றிக்கஹமுல - விஸ்தீரணம்: 0.0149 ஹெக்டயார்**

வடக்கு: டபிள்யூ. எம். ஹேமசிறி விக்கிரமசிங்க உரிமை கோரும் அற்றிக்கஹமுல ; கிழக்கு: எச். எம். புஞ்சி பண்டா மற்றும் எச். எம். எஸ். எஸ். ஹேரத் உரிமை கோரும் அற்றிக்கஹமுல ; தெற்கு: எச். எம். புஞ்சி பண்டா மற்றும் எச். எம். எஸ். எஸ். ஹேரத் உரிமை கோரும் அற்றிக்கஹமுல மற்றும் வீதி ; மேற்கு: வீதி, டபிள்யூ. எம். ஹேமசிறி விக்கிரமசிங்க உரிமை கோரும் அற்றிக்கஹமுல.

5 - 589

1A – G27572 – 32 (2018/05) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.